மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2021 பிப்ரவரி 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1–05

11. பதினைந்தாவது பேரவை இறுதிக் கூட்டத் தொடர் நிறைவு பெறுவதையொட்டி முதலமைச்சரின் நன்றி மற்றும் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதுமே, எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்கள், குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "எடப்பாடி பழனிசாமியினுடைய ஆட்சி ஒரு மாதம்தான் இருக்கும்; 3 மாதங்கள்தான் இருக்கும்; 6 மாதங்கள்தான் இருக்கும்" என்று அவதூறான, உண்மைக்குப் புறம்பான பிரச்சாரங்களையெல்லாம் செய்து வந்தார்கள். அதையெல்லாம் இன்றையதினம் முறியடித்து, நான்காண்டுக் காலம் நிறைவுசெய்து, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஐந்தாவது ஆண்டிலும் நாம் அடியெடுத்து வைத்திருக்கிறோம். இன்றைக்கு நாட்டு மக்கள் எண்ணுகின்ற அளவிற்கு, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., இதய தெய்வம் புரட்சித்*

தலைவி அம்மா ஆகிய இரு தலைவர்களும் கண்ட கனவை, என் தலைமையில் நடைபெறுகின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வெற்றிகரமாக நிறைவேற்றி நாட்டு மக்களுடைய நன்மதிப்பை இன்றைக்குப் பெற்றுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் பதவியேற்றதிலிருந்து இன்றுவரை, நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கி, அதன் மூலமாகத் தமிழகம் இன்றைக்கு "வெற்றி நடைபோடும் தமிழகம்" என்ற அளவிற்கு உயர்ந்து, ஏற்றம் பெற்றிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்கள்கூட, மூக்கின்மேல் விரல் வைத்துப் பாராட்டுகின்ற அளவிற்கு திட்டங்களைச் செயல்படுத்தி, பாராட்டுகளைப் பெற்றிருக்கிற அரசு, அம்மா அவர்களின் அரசு என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்த சிறப்புமிகு ஆட்சிக்கு உறுதுணையாக விளங்கிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதேபோல், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திறமையாகத் தங்கள் துறைகளில் செயல்பட்டு, தேசிய அளவில் பல துறைகளில் விருதுகளைப் பெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* எனக்கு முழு ஒத்துழைப்பு நல்கிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு மனமார, உளமார நன்றிகளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், பல சோதனையான நேரங்களை நாம் கடந்து வந்திருக்கிறோம். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்றத்தில் 'எனக்குப் பின்னாலும் கழகம் 100 ஆண்டுக்காலம் ஆளும்' என்று சூளுரைத்தார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதற்கொப்ப, சோதனையான நேரங்களில், எனக்கு பக்கபலமாக இருந்து, நான்கு ஆண்டுக் காலம் ஆட்சியை நிறைவுசெய்து, ஐந்தாவது ஆண்டில் நான் அடியெடுத்து வைக்கும் அளவிற்கு சிறந்த நிருவாகம் அமைவதற்கு, சிறந்த ஆட்சியை இதுவரை வழங்கிட, உறுதுணையாக இருந்த கழக சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

அதேபோல், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சூடான விவாதங்களில் ஈடுபடுகின்றபோது, அதைப் பக்குவமாக, திறமையாகக் கையாண்டு, ஆளுமையோடு செயல்பட்டு, இன்றைக்கு இந்திய அளவில் தமிழக சட்டமன்றம் ஒரு முன்மாதிரி சட்டமன்றம் என்று விளங்குகின்ற அளவிற்கு நடுநிலையோடு அவையை நடத்தியிருக்கிற, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி), அவருக்குத் துணையாக இருந்த மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிறப்பாகச் செயல்படுவதற்கு எல்லாவகையிலும் துணை நின்ற உயர் அதிகாரிகளுக்கும், இன்றைக்கு அரசு தீட்டிய திட்டங்கள் அனைத்தையும் நாட்டு மக்களுக்குச் செவ்வனே எடுத்துச்சென்று, அரசுக்கு நற்பெயரைத் தேடித் தந்த அரசு அலுவலர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தீட்டுகின்ற திட்டங்களை, வேகமாக, துரிதமாகச் செயல்படுத்திட ஏதுவாக, ஒவ்வொரு துறையிலும் இருந்து வருகின்ற கோப்புகளையெல்லாம், எனக்கு உரிய நேரத்தில் சமர்ப்பித்து, அனுமதி பெற்று, உரிய துறைகளுக்கு அனுப்பி வைத்த என்னுடைய துறைச் செயலாளர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–10

இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, 5 ஆண்டுக்காலம் நிறைவு செய்கின்ற வேளையில், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, நாட்டு மக்களுடைய அன்பைப் பெற்றிருக்கின்றது; நாங்கள் நன்மதிப்பைப் பெற்றிருக்கின்றோம். 50 ஆண்டுக்காலமாக தீர்க்கப்படாமலிருந்த காவேரி நதிநீர்ப் பிரச்சினையில், சட்டப் போராட்டத்தின் மூலமாக இன்றைக்குத் தீர்ப்பைப் பெற்று, அதனை நடைமுறைப்படுத்திய அரசு,

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) டெல்டா பாசன விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டபோது, டெல்டா பாசன விவசாயிகளுக்கு அரணாக இருந்து, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்ற அறிவிப்பைக் கொடுத்து, வேளாண் பெருமக்களைப் பாதுகாத்த அரசும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுபோல், வறட்சி ஏற்பட்டபோது, அத்தகைய வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி மற்றும் இடுபொருள் நிவாரணம் வழங்கிய அரசும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதேபோல், புயல் வந்தபோதும், வெள்ளம் வந்தபோதும், பருவம் தவறி மழை பெய்தபோதும், அதன் காரணமாக வேளாண் பெருமக்கள் பாதிக்கப்பட்டபோது, பாதிப்பிற்குள்ளான விவசாயிகளை அரவணைத்து, அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்கிய அரசும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதேபோல், விவசாயிகள் பயிரிட்டு, பயிர்ச் சேதம் ஏதேனும் ஏற்பட்டால், இன்றைக்கு நாட்டிலேயே அதிகமாக இழப்பீட்டுத் தொகையை அவர்களுக்கு வழங்கிய அரசும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த வகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கண்ணை இமை காப்பதுபோல் வேளாண் பெருமக்களைகக் காத்தது என்று சொன்னால், அது மிகையாகாது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஒரு மாநிலம் வளர்ச்சி பெறுவதற்கு தடையில்லா மின்சாரம் வேண்டும். அத்தகைய தடையில்லா மின்சாரத்தை வழங்கி, தமிழகத்தை மின்மிகை மாநிலமாக உருவாக்கிய அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசுதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதேபோல், கல்வியில் வளர்ச்சியை, புரட்சியை ஏற்படுத்தியது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதிகமான அளவில் சட்டக் கல்லூரிகளைத் திறந்திருக்கின்றோம். ஒரே நேரத்தில் 11 மருத்துவக் கல்லூரிகளைக் கொண்டுவந்து, வரலாற்றுச் சாதனை படைத்திருக்கின்றோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* 3 கால்நடை மருத்துவக் கல்லூரிகள் மற்றும் கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தைத் துவக்கி சாதனை படைத்திருக்கின்றோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பலவகை தொழில்நுட்பக்

கல்லூரிகள் அதிக அளவில் திறந்து, இன்றைக்கு உயர் கல்வியிலே நாட்டிலே முதன்மை மாநிலம் என்ற பெருமையை நாங்கள் பெற்றிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனையைக் கொண்டுவந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நனவாக்கிய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு தேசத்திற்காக உழைத்து மறைந்த, ஒப்பற்ற தலைவர்களுக்குப் பெருமை சேர்க்கும் விதமாக, அவர்களுக்கு மணிமண்டபங்கள் அமைத்தும், அவர்களது திருவுருவச் சிலைகளை திறந்தும், அவர்களுக்கு அரசு விழாக்கள் கொண்டாடியும் வருவதோடு, சட்டமன்றத்தில் அவர்களுக்குப் புகழ் சேர்க்கும் விதமாக, அவர்களுடைய உருவப் படங்களைத் திறந்தும் பெருமை சேர்த்திருக்கிற அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாவற்றிற்கும் மேலாக, எங்களையெல்லாம் இங்கே அமர வைத்து அழகு பார்த்த நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பிரம்மாண்டமான வகையில் நினைவு மண்டபம் அமைத்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழ்ந்த, நமக்கெல்லாம் கோயிலாகத் திகழக்கூடிய அந்த வேதா நிலையத்தை, நினைவு இல்லமாக அறிவித்ததும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி நான் முதலமைச்சராகப் பதவி ஏற்ற காலத்திலிருந்து, பல்வேறு சாதனைகளைப் புரிந்து, சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் நினைவுகூர்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி) பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கண்ட கனவை, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவை, நனவாக்குகின்ற விதமாக, வருகின்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் பெரும்பான்மையான இடங்களில் வெற்றிபெற்று, மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை அமைப்போம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய கூட்டணியில் இடம்பெற்றுள்ள கூட்டணிக் கட்சிகளும் அனைத்து இடங்களிலும் வெற்றி பெறும்